செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனாரின்

# தியாக வாழ்வை வணங்குவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, நவ. 19-

'செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனாரை போற்றி, அவரது தியாக வாழ்வை வணங்குவோம்' என்று அவரது நினைவு நாளையொட்டி, தமது சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளர்.

'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 88 ஆவது நினைவு நாளான தியாகத் திருநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின்

**சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**



**தமிழ்ப் பற்று - ஈகையுணர்வு - விடுதலைத் தாகம் ஆகியவை கொண்டு வரலாற்றிலும் தமிழர் உள்ளங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ. சிதம்பரனார் அவர்களது நினைவு நாளில், இன்ப விடுதலைக்காகத் துன்பச் சிறையைத் துச்சமென நினைத்த அந்தச் செக்கிழுத்த செம்மலைப் போற்றுவோம்! அவரது தியாக வாழ்வை வணங்குவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.11.2024) சென்னை, கிண்டியில் உள்ள ஐடிசி கிராண்ட் சோழா ஹோட்டலில், 16வது நிதிக்குழு கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள குழுவின் தலைவர் முனைவர். அரவிந்த் பனகாரியா மற்றும் உறுப்பினர்கள் அஜய் நாராயண் ஜா,திருமதி. அன்னி ஜார்ஜ் மேத்யு, முனைவர். மனோஜ் பாண்டா ஆகியோருக்கு சால்வை அணிவித்து, வரவேற்றார். இவ்வரவேற்பு நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம். நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயசந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவையொட்டி

# மாவட்ட அளவில் கழக வரலாறு விளக்க பயிற்சிப் பாசறை - நல உதவிகள் வழங்கல்!

## வாகை சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, நவ. 19 -

மாநில கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மாநில நிர்வாகிகள் கூட்டம் நேற்று (18.11.2024) காலை 11.00 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமையில், செயலாளர்கள், பொள்ளாச்சி மா.உமாபதி, திருவாரூர் அர.திருவிடம், இறையன்பன் குத்தூஸ், தில்லை செல்வம், துணைச் செயலாளர்கள் சி.வீரகணேசன், கவிஞர் நன்மாறன், திருச்சி எழில்மாறன், மீனா ஜெயக்குமார், ஜாகிர்உசேன் மற்றும் புதுவை மாநில அமைப்பாளர் சங்கர் (எ) சிவசங்கரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

**இரங்கல் தீர்மானம்!**

தலைவர் கலைஞர், தளபதி ஆகியோரின் பேரன்புக்கு உரியவரும், முரசொலி இதழின் நீண்ட கால பொறுப்பு ஆசிரியராகவும் விளங்கிய கழகத்தின் மதிப்புமிக்க தலைவர்களில் ஒருவரான முரசொலி செல்வம் அவர்களின் மறைவுக்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை ஒட்டி பள்ளி மாணவ - மாணவியருக்கான தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய திரைப்பட உரையாடல்கள் மற்றும் கவிதைகள் ஒப்பித்தல் போட்டி மாவட்ட அளவில் முடிவுற்று மாநில அளவிலான போட்டியினை விரைவில் நடத்தி முடிப்பது என தீர்மானிக்கப் பட்டது.

இளைஞர் அணி செயலாளரும், தமிழக துணை முதலமைச்சரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவினை மாவட்ட அளவில், கழக வரலாறு விளக்க பயிற்சிப் பாசறை மற்றும் நலத்திட்ட உதவிகள் போன்ற நிகழ்ச்சிகளை சிறப்புற நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை

# திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவோம்!

## கிழக்கு - மேற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

திண்டுக்கல், நவ. 19 -

திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு அவைத் தலைவர்கள் மோகன், காமாட்சி ஆகியோர் தலைமை தாங்கினர்.

இந்த கூட்டத்தில் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் உணவுத் துறை அமைச்சருமான அர சக்கரபாணி மற்றும் கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் இ.பெ. செந்தில்குமார் ஆகியோர் கூட்டத்தின் நோக்கம் குறித்து சிறப்புரை ஆற்றினார்கள்.

வருகிற 27 ஆம் தேதி தமிழகத்தின் துணை முதல்வர் கழக இளைஞரணி மாநில செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டம் முழுக்க கட்சி கொடி ஏற்றி இனிப்பு வழங்குதல், பொதுக் கூட்டங்கள் தெருமுனை பிரச்சாரம் நலத்திட்ட உதவிகள்மற்றும்விளையாட்டுப் போட்டிகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை வெகு சிறப்பாக செய்வது என்று முடிவு செய்யப்பட்டது மேலும் வருகிற சட்டமன்ற தேர்தலில் திண்டுக்கல் மாவட்டத்தில் ஏழு தொகுதியையும் தி.மு.க. கூட்டணி கைப்பற்ற முழு வீச்சில் செயல்படுவது எனவும் பேசப்பட்டது.

இந்த கூட்டத்தில் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்தி ராஜன், தலைமை கழக தேர்தல் தொகுதி பொறுப்பாளர்கள் ரஞ்சன் துரை, கவிஞர் சல்மா, மாவட்ட கழக துணை செயலாளர்கள் ராஜாமணி, நாகராஜன், பிலால் உசேன்,மார்க்கெட் மேரி, தாமரைச் செல்வி, சுந்தர்ராஜன் பொருளாளர்கள் சத்தியமூர்த்தி, விஜயன், மாநகர செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, நடராஜன், கனகதுரை, நகர செயலாளர் வேலுமணி, வெள்ளைச்சாமி, முகமது இப்ராஹிம், ஒன்றிய செயலா ளர்கள் வெள்ளிமலை, நெடுஞ்செழியன், முருகேசன், ராமன், மணி, ஜோதிஸ்வரன், சுப்பையன், சீனிவாசன், சாமிநாதன், கவிதா பார்த்திபன்,

மாநகர நிர்வாகிகள் முகமது இப்ராஹிம், அழகர்சாமி, முகமது சித்தீக், பொருளாளர் மீடியா சரவணன், பொதுக்குழு உறுப்பினர்கள் கலை ராஜா, சுப்பிரமணி, அக்பர், மூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கணேசன், மாணவரணி அமைப்பாளர் அஸ்வின் பிரபாகரன், மாவட்ட மகளிர் அணி தலைவர் உமா மகேஸ்வரி, மகளிர் தொண்டர் அணி செயலாளர் இந்திரா, மருத்துவர் அணி அமைப்பாளர் அமிர்தகடேஸ்வரர், விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ராஜேந்திரன், விவசாய அணி அமைப்பாளர் கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகா னந்தம், பகுதி கழகச் செயலாளர்கள் சந்திரசேகரன், ஜானகிராமன், பஜுல் ஹக், ராஜேந்திரன் உள்ளிட்ட ஒன்றிய செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா !

# தேனி தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தேனி, நவ.19 -

தேனி தெற்கு மாவட்டக்கழக செயலாளரும், கம்பம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினருமான கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



தமிழ்நாடு துணை முதலமைச்சரும், தி.மு.க. இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, தேனி தெற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் நலத்திட்ட உதவிகள் வழங்கிடுவது குறித்து இன்று (19.11.2024 - செவ்வாய்க்கிழமை), மாலை 4.00 மணிக்கு சின்னமனூர் ஓடைப்பட்டி ரோட்டில் உள்ள கவிப்பிரியா மஹாலில் மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் மாவட்டக்கழக அவைத் தலைவர் த.மனோகரன் தலைமையிலும், கம்பம் தொகுதி தேர்தல் பார்வையாளர் ஜெயன் மற்றும் ஆண்டிபட்டி தொகுதி தேர்தல் பார்வையாளர் முத்துக்குமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு மாநில, மாவட்டக்கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியக்கழக, நகர் கழக, பேரூர் கழக, கிளைக் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் என அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தேனி தெற்கு மாவட்டக்கழக செயலாளரும், கம்பம் சட்டப் பேரவை உறுப்பினருமான கம்பம் நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில்

# நான்கு சட்டமன்றத் தொகுதியில் வாக்காளர் சரிபார்த்தல் பணிகள்!

## கழகத்தினர் தீவிரமாக பணியில் ஈடுபட்டனர்!

சிவகங்கை, நவ. 19 -

இம்மாதம் 16, 17 ஆகிய தேதிகளில் மாநிலம் முழுவதும் இந்திய தேர்தல் ஆணையத்தினால் வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் மேற்கொள்ளப் பட்டது .

இதில் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர் சேர்த்தல், விடுபட்ட வாக்காளர்களை புதிதாக சேர்த்தல், நீக்குதல் இறந்து போன வாக்காளர்களை நீக்குதல் ,வாக்காளர் பட்டியலில் உள்ள திருத்த பணிகள் உட்பட பல்வேறு பணிகள் அந்தந்த வாக்குச் சாவடிகளில் மேற்கொள்ளப்பட்டது. இதில் கழக நிர்வாகிகள் தீவிரமாக பணி மேற்கொள்ளுமாறு கழகத்தலைவரும்,முதல்வருமான மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார்.

சிவகங்கை மாவட்டத்தில்மாவட்ட கழக செயலாளரும்,கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய , நகர , பேரூர் கழக நிர்வாகிகள் பாகமுகவர்களுடன் இணைந்து வாக்காளர் பட்டியல் திருத்த பணிகளை மேற்கொள்ளுமாறு ஆலோசனை கூறியிருந்தார். அதன்படி சிவகங்கை, காரைக்குடி, திருப்பத்தூர், மானாமதுரை, ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதி உள்ள வாக்காளர் மையங்களில் கடந்த இரண்டு தினங்களாக வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டது .

இதில் நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் தலைமைக் கழகத்தினால் நியமிக்கப்பட்டுள்ள சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் முன்னாள் எம்.எல்.ஏ டாக்டர் சுந்தர்ராஜ், முன்னாள் எம்.எல்.ஏ. கே. முருகவேல், சிவகங்கை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் புதுக்கோட்டை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் க.சண்முகம். மானாமதுரை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் புதுக்கோட்டை ஆர். கே. என். போஸ் ஆகியோர் பல்வேறு பகுதிகளுக்கு சென்று ஆய்வினை மேற் கொண்டார்கள் .

அந்தந்த தொகுதி பாக முகவர்களுடன் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர் தாங்கள் மேற்கொண்ட பணியினை விளக்கி கூறினார்கள். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. முன்னாள் எம்.எல்.ஏ. சுப மதியரசன் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஆர்.ஜோன்ஸ்ருசோ, மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மேயர் எஸ்.முத்துதுரை, துணைமேயர் என்.குணசேகரன் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 88-வது நினைவு நாளான தியாகத் திருநாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று (18.11.2024) சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் மு.பா.அன்புச்சோழன் (மக்கள் தொடர்பு) மற்றும் துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.


